ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

# நம்மாழ்வார் அருளிச்செய்த
# ॥ சொன்னால் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ சொன்னால் ॥

மானிடரைப் பாடாது மாதவனை ஏத்தும் எனல்

‡சொன்னால் விரோதம் இது⋆ ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ⋆
என் நாவில் இன் கவி⋆ யான் ஒருவர்க்கும் கொடுக்கிலேன்⋆
தென்னா தெனாவென்று⋆ வண்டு முரல் திருவேங்கடத்து⋆
என்னானை என்னப்பன்⋆ எம் பெருமான் உளனாகவே (1)

உளனாகவே எண்ணித்⋆ தன்னை ஒன்றாக தன் செல்வத்தை⋆
வளனா மதிக்கும்⋆ இம் மானிடத்தைக் கவி பாடியென்⋆
குளனார் கழனி சூழ்⋆ கண்ணன் குறுங்குடி மெய்ம்மையே⋆
உளனாய எந்தையை⋆ எந்தை பெம்மானை ஒழியவே (2)

ஒழிவொன்றில்லாத⋆ பல் ஊழிதோற் ஊழி நிலாவப்⋆ போம்
வழியைத் தரும்⋆ நங்கள் வானவர் ஈசனை நிற்கப் போய்⋆
கழிய மிக நல்ல வான் கவி கொண்டு⋆ புலவீர்காள்⋆
இழியக் கருதி⋆ ஓர் மானிடம் பாடல் என்னாவதே (3)

என்னாவதெத்தெனை நாளைக்குப் போதும்⋆ புலவீர்காள்⋆
மன்னா மனிசரைப்⋆ பாடிப் படைக்கும் பெரும் பொருள்⋆
மின்னார் மணி முடி⋆ விண்ணவர் தாதையைப் பாடினால்⋆
தன்னாகவே கொண்டு⋆ சன்மஞ்செய்யாமையும் கொள்ளுமே (4)

கொள்ளும் பயன் இல்லைக்⋆ குப்பை கிளர்த்தன்ன செல்வத்தை⋆
வள்ளல் புகழ்ந்து⋆ நும் வாய்மை இழக்கும் புலவீர்காள்⋆
கொள்ளக் குறைவிலன்⋆ வேண்டிற்றெல்லாம் தரும் கோதில்⋆ என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்⋆ கவி சொல்ல வம்மினோ (5)

வம்மின் புலவீர்!⋆ நும் மெய் வருத்திக் கை செய்துய்ம்மினோ⋆
இம் மன் உலகில் செல்வர்⋆ இப்போதில்லை நோக்கினோம்⋆
நும் இன் கவி கொண்டு⋆ நும் நும் இட்டா தெய்வம் ஏத்தினால்⋆
செம் மின் சுடர் முடி⋆ என் திருமாலுக்குச் சேருமே (6)

சேரும் கொடை புகழ்⋆ எல்லை இலானை⋆ ஓராயிரம்
பேரும் உடைய பிரானை அல்லால்⋆ மற்று யான் கிலேன்⋆
மாரி அனைய கை⋆ மால் வரை ஒக்கும் திண் தோள் என்று⋆
பாரில் ஓர் பற்றையைப்⋆ பச்சைப் பசும் பொய்கள் பேசவே (7)

வேயின் மலி புரை தோளி⋆ பின்னைக்கு மணாளனை⋆
ஆய பெரும் புகழ்⋆ எல்லை இலாதன பாடிப்போய்⋆
காயம் கழித்து⋆ அவன் தாள் இணைக்கீழ்ப் புகும் காதலன்⋆
மாய மனிசரை⋆ என் சொல்ல வல்லேன் என் வாய் கொண்டே (8)

வாய் கொண்டு மானிடம் பாட வந்த⋆ கவியேன் அல்லேன்⋆
ஆய் கொண்ட சீர் வள்ளல்⋆ ஆழிப் பிரான் எனக்கே உளன்⋆
சாய் கொண்ட இம்மையும் சாதித்து⋆ வானவர் நாட்டையும்⋆
நீ கண்டு கொள் என்று⋆ வீடும் தரும் நின்று நின்றே (9)

நின்று நின்று பல நாள் உய்க்கும்⋆ இவ்வுடல் நீங்கிப்போய்⋆
சென்று சென்றாகிலும் கண்டு⋆ சன்மம் கழிப்பான் எண்ணி⋆
ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான்⋆ கவி ஆயினேற்கு⋆
என்றும் என்றும் இனி⋆ மற்றொருவர் கவி ஏற்குமே (10)

‡ஏற்கும் பெரும் புகழ்⋆ வானவர் ஈசன் கண்ணன் தனக்கு⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ வண் குருகூர்ச் சடகோபன் சொல்⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ ஆயிரத்துள் இவையும் ஓர் பத்து⋆
ஏற்கும் பெரும் புகழ்⋆ சொல்ல வல்லார்க்கில்லை சன்மமே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com